யா/ வல்லை மகளிர் மகா வித்தியாலயம்

வல்வெட்டித்துறை

# நிறுவுநர் தினமும் பரிசளிப்பு விழாவும் – 2016

காலம் : 2016.10.27 வியாழக்கிழமை

நேரம் : பி.ப 1.30 மணி

இடம் : பாடசாலை பிரதான மண்டபம்

**தலைவர்**

**செல்வி. இ. சுப்பிரமணியக்குருக்கள்**

(அதிபர், யா/வல்லை மகளிர் மகா வித்தியாலயம்)

**பிரதம விருந்தினர்**

**உயர்திரு. சிவபாதம் நந்தகுமார் அவர்கள்**

வலயக்கல்விப் பணிப்பாளர்

(வலயக்கல்வி அலுவலகம் - வடமராட்சி)

**பாடசாலைச் சமூகம்**

# பாடசாலைக் கீதம்

இராகம்:- ஹம்சத்வனி

இயற்றியவர் :- எஸ்.முத்துக்குமாரசுவாமி

பொன்னான எங்கள் மகளிர் மகா வித்யாலயம்
பொலிந்து சிறந்து வளர்ந்து வாழ்கவே
பொன்னான எங்கள் வல்வை மகளிர் மகா வித்யாலயம்
பொலிந்து சிறந்து வளர்ந்து வாழ்கவே

விஞ்ஞான கலைகள்பல் விதரணையில் ஊறி
எந்நாளும் முன்னோக்கி இதமுடனே தேறி
தன்மானம் தாங்கிய தாழ்வையும் சீறி
தரத்தை நிலை நிறுத்தி உரத்தைக் கொடுக்கும் எங்கள்
பொன்னான -

இங்கிதப் பண்புகள் பேசவைத்து
எதிரியையும் இணைக்கும் வழி வகுத்து
சங்கீத நாட்டிய கலை வளர்த்து
சமயத்தை முதற் கொண்டு சரீரத்தையும் வளர்க்கும் எங்கள்
பொன்னான -

மனையறம் யாதென தெளிய வைத்து
மாந்தரின் வாழ்வுதனை மகிழ வைத்து
அனுதினம் பொருட்பேணி அறம் வளர்த்து
ஆக்கத்தைப் பெருக்குகின்ற ஊக்கத்தைக் கொடுக்கும் எங்கள்
பொன்னான -

# தூரநோக்கு

சமகால உலகின் தேவைகளை நிறைவு செய்யும் வகையில், நவீன தொழில் நுட்ப திசைமுகப்படுத்தலில் கற்றல் சூழலைத் தூண்டி ஒவ்வொரு தனியாளினதும் சுயசிந்தனையை உச்ச அளவினதாக்கி கல்வி மற்றும் வாழ்க்கையில் எதிர்நோக்கும் சவால்களுக்கு முகம் கொடுக்கக் கூடியதாக மாணவர்களின் பல்வேறு ஆற்றல்களையும் வெளிப்படுத்தும் சமூகம்.

# பணிக்கூற்று

- ஒவ்வொரு தனியாளினது ஆன்மீகத்தையும் நல்லொழுக்கத்தையும் ஊக்குவித்தல்.
- மனிதவிழுமியங்களையும் நேர்மனப்பாங்குகளையும் வளர்த்தல்.
- நவீன கற்றல் சாதனங்களை வினைத்திறன் மிக்கதாகப் பயன் படுத்தி, ஒவ்வொருவரினதும் ஆற்றல்களை வெளிப்படுத்துவதற்கான ஒரு சூழலை உருவாக்குதல்.
- சகல மட்டங்களிலும் நேரமுகாமைத்துவத்தைக் கடைப் பிடித்தல்.
- நவீன தொடர்பாடல் சாதனங்களினூடாக அத்தியாவசியமான தகவல்களை வழங்குதல்.
- ஒவ்வொருவரினதும் தனித்துவத்தையும் தன்னம்பிக்கையையும் ஊக்குவித்தல்.
- தர்க்கரீதியான ஆக்கத்திறன் சிந்தனையை மேம்படுத்துதல்.
- மிகை நிரப்புக் கற்றல் செயற்பாடுகளைப் பாடசாலை மட்டத்தில் ஊக்குவித்தல்.
- ஒவ்வொரு மாணவரும் வருடம் முழுவதும் இணைப்பாட விதானச் செயற்பாடுகளில் பங்குபற்றக் கூடிய வகையில் திட்டமிடப்பட்ட செயற்பாடுகளை வழங்குதல்.
- உற்று நோக்கிய சிந்தனை, கண்டாய்தல் மற்றும் புத்தாக்க முயற்சிகளினூடாக அறிவைப் பெற்றுக் கொள்ளுதல்.

# நிகழ்ச்சி நிரல்

- விருந்தினர் வரவேற்பு
- மங்கல விளக்கேற்றல்
- நிறுவுநர் உருவப்படத்திற்கு மாலை அணிவித்தல்
- நிறுவுநர் உருவப்படத்திற்கு விளக்கேற்றல்
- இறைவணக்கம்

    1. தேவாரம்
    2. கிறிஸ்தவ கீதம்

- தமிழ்த்தாய் வாழ்த்து
- வரவேற்பு நடனம்
- வரவேற்புரை
  (திருமதி.க.செல்வசுந்தரம்)
- நிறுவுநர் உரை
  (திரு.கி.சிறீகாந்தராசா)
- அதிபர் அறிக்கை
  (செல்வி.இ.சுப்பிரமணியக்குருக்கள்)
- பிரதம விருந்தினர் கௌரவிப்பும் நினைவுப்பரிசில் வழங்குதலும்
- பிரதம விருந்தினர் உரை
  உயர்திரு.சிவபாதம் நந்தகுமார் அவர்கள்
  (கல்விப் பணிப்பாளர், வலயக்கல்வி அலுவலகம்,வடமராட்சி)
- பரிசில் வழங்கல்
  உயர்திரு.சிவபாதம் நந்தகுமார் அவர்கள்
  (கல்விப் பணிப்பாளர், வலயக்கல்வி அலுவலகம்,வடமராட்சி)
- நன்றி உரை
  (திருமதி.உ.சேதுபதி)
- கலை நிகழ்ச்சிகள்

# அதிபர் ஆண்டறிக்கை 2015/2016

ஈழமணி திருநாட்டின் முடியாய்த் திகழும் வடமராட்சிப் பிரதேசத்தில் வல்வெட்டித்துறை நகரப் பகுதியில் நெடியகாடு எனும் எழில்மிகு பதியினில் மாணவரது கல்வி, ஒழுக்கம், திறன், மனப்பாங்கு விருத்தி என்பவற்றில் உச்சக்கட்ட அபிவிருத்தியில் புகழ்பூத்துத் திகழ்வது நமது வல்வை மகளிர் மகா வித்தியாலயம் என்பதில் நான் பெரிதும் அகமகிழ்வுறுகின்றேன். எமது வித்தியாலயம் நிரூபணமானதும் நிச்சயமானதுமான பல சாதனை கள் படைத்து வெற்றிப்பதிவுகள் பலவற்றைக் கொண்டதோடு சைவவிழுமியமும், பண்பாடும் கொண்டிலங்கும் மாணவ சமூகத்தை யும் ஆசிரிய குழாத்தினையும் தன்னகத்தே கொண்டு வீறுநடை போடும் எமது பாடசாலையில் இந் நன்னாளில் எல்லாம் வல்ல நெடியகாடு விக்னேஸ்வரப் பெருமானின் அருட்கடாட்சத்துடன் இப் பரிசில் நாள் வெகுவிமரிசையாகக் கொண்டாடப்படுகிறது.

எமது நிறுவுநர் தினத்திற்கும் பரிசளிப்புவிழாவிற்கும் பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்பித்துக்கொண்டிருக்கும் வடமராட்சி யின் கல்வி உயர்விற்காக அரும்பாடுபட்டுச் செயற்படும் பெரு மதிப்புக்கும் பேரன்புக்குமுரிய வடமராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் மேன்மைமிகு உயர்திரு. சிவபாதம் நந்தகுமார் அவர்களே! வலயக்கல்வி உத்தியோகத்தர்களே! எமது அழைப்பினை ஏற்று வருகை தந்திருக்கும் அயற் பாடசாலை அதிபர்களே! ஆசிரியர்களே! எமது பாடசாலை அபிவிருத்திக்குழுச் செயலாளர் மற்றும் உறுப்பினர்களே! எமது பாடசாலை ஆசிரியப் பெருந்தகைகளே மாணவச் செல்வங்களே பெற்றோர்களே! நலன்விரும்பிகளே! பழைய மாணவர் சங்கச் செயலாளர் மற்றும் உறுப்பினர்களே! எல்லோருக்கும் எனது அன்பு கலந்த வணக்கத்தைத் தெரிவிப்பதில் பேருவகை கொள்கிறேன்.

எமது பாடசாலையின் 2016ஆம் ஆண்டுக்கான பரிசளிப்பு நாளின் அறிக்கையினைத் தங்கள் முன் சமர்ப்பிப்பதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

இன்றைய எமது பிரதம விருந்தினர் உயர்திரு சிவபாதம் நந்தகுமார் அவர்கள் தனது ஆரம்பக்கல்வியை யா/ தும்பளை சிவப்பிரகாச மகா வித்தியாலயத்திலும் அதனைத் தொடர்ந்து இடைநிலைக்கல்வியை யா/வேலாயுதம் மகா வித்தியாலயத்திலும் கற்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கற்று வணிகச்சிறப்பு பட்டதாரியாக வெளியேறினார்.

தனது பட்டதாரி ஆசிரியர் நியமனத்தை வன்னிப் பெருநிலப் பரப்பின் மு/மாங்குளம் மகா வித்தியாலயத்தில் ஆரம்பித்து கஷ்டப்பிரதேச சேவையை நிறைவு செய்து வடமராட்சிப் பிரதேசத்தில் யா/உடுப்பிட்டி அ.மி.த.க பாடசாலை, யா/வட.இந்து மகளிர்க் கல்லூரி ஆகியவற்றிலே புகழ்பூத்த வணிக ஆசிரியராகப் பணியைத் தொடர்ந்தார்.

இயல்பாக ஆன்மீக ஈடுபாடு கொண்டவராக விளங்கினார். வடமராட்சியில் அமையும் வல்விபுர மாயவனையும், தும்பளை நெல்லண்டை அம்மனையும் பருத்தித்துறை சிவன் ஆலயத்தில் உறையும் சிவன் பார்வதியையும் தினசரி வழிபட தவறுவதில்லை. ஆன்மீக ஈடுபாடு, பன்மதிநுட்பம், தகவல்களை சேகரித்து ஒழுங்க மைத்து வழங்கும் ஆற்றல் என்பன இவரிடம் நாம் கண்ட நற்குணங்களாகும்.

தனது தொழில் வாழ்க்கையின் அதிஉன்னத நிலையை, இலங்கை கல்வி நிருவாகப் போட்டிப்பரீட்சையில் சித்தியடைந்து உயர்த்திக்கொண்டார். இலங்கை கல்வி நிருவாக உத்தியோகத்த ராக மாறி வடமராட்சி மருதங்கேணி கோட்டக்கல்விப்பணிப்பாளராக கடமையாற்றி பின்னர் வடமராட்சி வலயத்தின் திட்டமிடல் பிரிவிலே பிரதிக்கல்விப்பணிப்பாளராக கடமையாற்றினார். இவரது

பாடசாலைத் திட்டமிடலினால் வடமராட்சிப் பாடசாலைகள் பல்வேறு விதத்திலே வளர்ச்சி கண்டன. வடமராட்சியிலுள்ள 82 பாடசாலைகள் பற்றிய தகவல்களையும் தவறு இல்லாது நொடிப் பொழுதில் எடுத்தியம்பும் வல்லமையை நாம் கண்டிருக்கின்றோம்.

திட்டமிடல் பிரிவில் இவர் ஆற்றிய பணிகள் இவரை பின்னாளிலே வடமராட்சிக் கல்விப் பணிப்பாளராக உயர்வு பெற வைத்தது நாம் அனைவரும் பெற்றுக்கொண்ட பெரும் பேறாக கருதவேண்டும். இவரது நல்லாட்சியிலே வடமராட்சிப் பாடசாலை களில் பௌதீக மனித வள மற்றும் இதரவள உயர்வுகள் நிறை வாகக் கிடைக்கப்பெற்றுள்ளன.

இத்தகைய உயர்வும் மாட்சிமையும் கொண்ட பண்பாளனை எமது பரிசளிப்பு விழாவின் பிரதம விருந்தினராக உங்கள் அனைவருக்கும் அறிமுகம் செய்து வைப்பதில் மட்டற்ற மகிழ்ச்சி யடைகிறேன்.

தங்களது வருகை எமது பாடசாலைச் சமூகத்தை மகிழ்ச்சி யால் திளைக்க வைத்திருக்கிறது. தங்களுக்கு இருக்கும் வேலைப் பளுவின் மத்தியிலும் எமது அழைப்பை ஏற்று பிரதம விருந்தின ராக வருகை தந்து கௌரவித்தமைக்காகத் தங்களுக்கு எமது பாடசாலைச் சமூகம் சார்ந்து நிறைவான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வடமராட்சிப் பிரதேசத்தில் எமது பாடசாலை சைவப் பாரம்பரியத்தையும் கலாசாரத்தையும் கட்டிக்காத்து கல்வித்துறை யிலும் இணைப்பாடவிதானச் செயற்பாடுகளிலும் பெருமுன்னேற்றம் கண்டு வருகின்றது. இதற்கு உறுதுணையாக இருந்து அர்ப்பணிப் புடன் சேவையாற்றும் ஆசிரியர் குழாத்தினர் அனுசரணை வழங்கும் வலயக்கல்வி அதிகாரிகள், ஆதரித்து உதவிகள் நல்கும் பழைய மாணவர்கள், பாடசாலை அபிவிருத்திக் குழு அங்கத்தவர்கள், நிர்வாகத்தினர் அனைவருக்கும் இவ்விழா

நன்னாளிலே எனது நன்றியையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இன்றைய உலகின் சவால்களை எதிர்கொள்ளத்தக்க சிந்தனைத்திறனும் செயற்றிறனும் நேர்மையும் கொண்ட மாணவர் களை உருவாக்கும் வகையில் எமது பாடசாலைக்கல்வி முயற்சி கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இந்தவகையில் எமது பாடசாலை மாணவர்களின் சாதனைகள் படிப்படியாக மேல் நோக்கிச் செல்வது பெருமகிழ்ச்சிக்குரியதாகும்.

கடந்த காலங்களில் எமது பாடசாலையிலிருந்து கல்வி கற்று வெளியேறிய பலர் நாட்டின் பல்வேறு பகுதிகளில் உயர் பதவிகளில் மிளிர்வது சாதனைகளுக்குரிய ஆதாரங்களாகின்றன.

**எமது பாடசாலையின் மாணவர் விபரம் - 2016**

| தரம் | பிரிவு | மாணவர் தொகை |
|---|---|---|
| தரம் 1 - 5 | ஆரம்பப்பிரிவு | 154 |
| தரம் 6 - 11 | இடைநிலைப்பிரிவு | 166 |
| தரம் 12 - 13 | சிரேஷ்டபிரிவு | 77 |
| | **மொத்தம்** | **397** |

**எமது பாடசாலையின் ஆசிரிய ஆளணி விபரம் - 2016**

| கல்வித்தகைமை | ஆசிரியர் தொகை |
|---|---|
| முதுகல்வியியல்மாணி | 01 |
| முதுமாணி | 01 |
| நுண்கலைமாணி | 04 |
| தொழில்நிர்வாகமாணி | 01 |
| வணிகமாணி | 04 |
| கலைமாணி | 05 |
| பயிற்றப்பட்டோர் | 12 |
| மொத்தம் | **28** |

## புதிதாக இப்பாடசாலைக்கு வருகை தந்த ஆசிரியர்கள்

திரு.கி.சிறீகாந்தராசா
திரு.ப.கமலக்கண்ணன்
திரு.சி.கஜானன்
திருமதி.க.செல்வானந்தம்
திருமதி.த.ஜெயரூபன்
திருமதி.கு.இளங்கோவன்

## பாடசாலையில் இருந்து இடமாற்றம் பெற்றுச் சென்றோர்

திருமதி.ல.அருந்தவச்செல்வம்
திருமதி.ம.பிரதாப்
திருமதி.சு.சுதாகரன்

கடந்த வருடத்தில் மேற்படி ஆசிரியர்கள் இப் பாடசாலையில் அர்ப்பணிப்புடன் கடமையாற்றி இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ளனர்.

## எமது பாடசாலையின் கல்விசாரா ஆளணி விபரம்

| | |
|---|---|
| அலுவலக உதவியாளர் | 01 |
| நூலக உதவியாளர் | 01 |
| பாடசாலைக் காவலாளி | 01 |

சென்ற வருட ஐந்தாம் தரப் புலமைப்பரிசில் பெறுபேறுகளை இம்முறை நாம் இழந்தபோதிலும் அடுத்துவரும் காலங்களில் எமது பெறுபேறுகளை உயர்த்துவதற்குரிய முயற்சிகளைச் செய்து வருகின்றேன்.

| ஆண்டு | பரீட்சைக்குத் தோற்றியோர் | சித்தியடைந்தோர் | சித்திவீதம் |
|---|---|---|---|
| 2015 | 34 | 09 | 26.5% |
| 2016 | 33 | 01 | 03.03% |

செல்வன் வைத்தீஸ்வரன் யோகன் அவர்கள் 154 உயர் புள்ளிகள் பெற்ற சாதனை படைத்துள்ளார். 23 மாணவர்கள் 100 புள்ளிகளுக்கும் மேல் பெற்று சித்தியடைந்துள்ளனர். 06 மாணவர்கள் 70 புள்ளிகளுக்கும் மேல் பெற்று சித்திவீதம் 91 சத வீதத்திற்கு உயர்ந்துள்ளதையும் இவ்வேளையில் குறிப்பிடுவதில் பெருமகிழ்வுறுகின்றேன்.

க.பொ.த. சாதாரண தரத்தைப் பொறுத்த வரையில் சித்தி வீதமானது 2014ஆம் ஆண்டு 58.62% ஆக இருந்தது. 2015 ஆம் ஆண்டு 81.48% சதவீதமாக உயர்ந்துள்ளது. இதனை இனிவரும் காலங்களிலும் தக்கவைத்துக் கொள்வோம்.

## க.பொ.த. சாதாரண தரம் - 2015

| பாடங்கள் | தோற்றியோர் | சித்தியடைந்தோர் | சித்திவீதம்% |
|---|---|---|---|
| சமயம் | 24 | 24 | 100 |
| கத்தோலிக்கம் | 03 | 03 | 100 |
| தமிழ் | 27 | 27 | 100 |
| ஆங்கிலம் | 27 | 15 | 55.55 |
| விஞ்ஞானம் | 27 | 21 | 77.77 |
| கணிதம் | 27 | 22 | 81.48 |
| வரலாறு | 27 | 26 | 96.29 |
| புவியியல் | 08 | 08 | 100 |
| வர்த்தகம் | 19 | 17 | 89.47 |
| சங்கீதம் | 04 | 04 | 100 |
| நடனம் | 03 | 03 | 100 |
| சித்திரம் | 02 | 02 | 100 |
| தமிழ்இலக்கியநயம் | 18 | 18 | 100 |
| தகவல் தொ.நுட்பம் | 10 | 10 | 100 |
| கடல்வளம் | 09 | 09 | 100 |
| சுகாதாரம் | 08 | 08 | 100 |

2015 ஆம் ஆண்டு க.பொ.த சாதாரண தரத்தில்

| தொ.இல | பெயர் | பெறுபேறு |
|---|---|---|
| 1. | பிறேம்குமார் பகீரதி | 8A,B |
| 2. | சிவபாதராசா லிவேணிகா | 8A,B |
| 3. | யோகராஜன் கிருஜா | 8A,C |
| 4. | கண்ணதாசன் சைலேந்திரி | 7A,2B |
| 5. | சந்திரமோகன் அஜந்தினி | 6A,3B |
| 6. | நிமல்ஸ் டினோஜா | 6A,2B,C |
| 7. | கஜேந்திரன் வைதேகி | 6A,2B,C |
| 8. | ரகு தேவிகௌசிகா | 5A,3B,C |
| 9. | றமணாகரன் தமிழினி | 5A,2B,2C |

என உயர் பெறுபேறுகளைப் பெற்றுப் பாடசாலைக்குப் புகழ் சேர்த்துள்ளனர்.

## க.பொ.த.உ யர்தரம்

| | 2014 | | | 2015 | | |
|---|---|---|---|---|---|---|
| பாடங்கள் | தோற்றியோர் | சித்தி அடைந்தோர் | சித்தி வீதம்% | தோற்றியோர் | சித்தி அடைந்தோர் | சித்தி வீதம்% |
| பொருளியல் | 05 | 05 | 100 | 08 | 08 | 100 |
| வர்த்தகம் | 04 | 04 | 100 | 04 | 04 | 100 |
| கணக்கியல் | 04 | 04 | 100 | 04 | 04 | 100 |
| தமிழ் | 09 | 08 | 88.8 | 06 | 05 | 83 |
| நடனம் | 02 | 02 | 100 | 03 | 03 | 100 |
| சங்கீதம் | 04 | 04 | 100 | 01 | 01 | 100 |
| கிறிஸ்தவ நாகரீகம் | 01 | 01 | 100 | - | - | |
| பொதுஆங்கிலம் | 13 | 01 | 7.69 | 10 | 03 | 30 |
| பொதுஅறிவு | 13 | 11 | 84.61 | 10 | 10 | 100 |
| புவியியல் | 01 | 01 | 100 | 01 | 01 | 100 |
| அளவையியல் | 01 | 01 | 100 | 01 | - | 00 |
| மனைப்பொருளியல் | 02 | 02 | 100 | 02 | 02 | 100 |

2015ம் ஆண்டு க.பொ.த. உயர்தரத்தில் பல்கலைக்கழக அனுமதிக்கு தகுதி பெற்றோர்

| தொ.இல | பெயர் | பெறுபேறு |
|---|---|---|
| | **வணிகப்பிரிவு** | |
| 1 | ஆனந்தராசா தமிழினி | 3A |
| 2 | கோணேஸ்வரன் பிரியங்கா | A,2B |
| 3 | ஸ்ரீகரன் கனுஜா | 2B,C |
| 4 | குகதாஸன் நிஷாந்தினி | 2C,S |
| | **கலைப்பிரிவு** | |
| 5 | இரத்தினஜோதி பிரதீபா | A,2B |
| 6 | முருகுப்பிள்ளை வானதி | A,B,S |
| 7 | சுப்பிரமணியசர்மா துளசி | A,2C |
| 8 | அன்ரன்மரியதாஸ் மேரிரூபதர்சினி | A,C,S |
| 9 | ஜெயச்சந்திரன் காஞ்சனா | 3C |

2015ல் உயர்தரப் பிரிவைச் சேர்ந்த மாணவி செல்வி. ஆனந்தராசா தமிழினி வர்த்தகப்பிரிவில் 3A சித்திபெற்று பல்கலைக்கழகத்திற்கு தெரிவாகியுள்ளார். கலைப்பிரிவைச் சேர்ந்த செல்வி. இரத்தினஜோதி பிரதீபா, செல்வி.முருகுப்பிள்ளை வானதி, செல்வி. சுப்பிரமணியசர்மா துளசி செல்வி. அன்ரன் மரியதாஸ் மேரி ரூபதர்சினி ஆகிய மாணவர்கள் நுண்கலைப்பிரிவுப் பாட நெறிக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

எமது பாடசாலை 50 வது ஆண்டை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கின்ற சூழ்நிலையில் தரம் 1லும் தரம் 6லும் மாணவர் தொகை அதிகரித்துள்ளது. தேசிய பரீட்சைகளில் அடைவு மட்டமும் அதிகரித்து வருகின்றது. விளைதிறனுள்ள பாடசாலை என்பதற்கு எடுத்துக்காட்டாக 2015ம் ஆண்டு 10 மாணவர்களை கணித விஞ்ஞானப்பிரிவிற்கு வெளியேற்றியுள்ளோம். இது நமக்குக் கிடைத்த மாபெரும் வெற்றி. தொடர்ந்தும் இந்நிலைமையைத் தக்கவைத்துக்கொள்வதற்கு சகல முயற்சிகளையும் மேற்கொள் வோம். சமூகத்தின் பார்வையும் எமது பாடசாலையின் மீது திரும்பியுள்ளது.

இப்பாடசாலையில் இரண்டு தசாப்த காலத்திற்கு முன்பு எவ்வாறு இருந்ததோ அந்த நிலையை அடைய வேண்டும் என்பதுதான் பாடசாலைச் சமுதாயத்தினரது விருப்பம். பாடசாலையில் ஒரு ஆரோக்கியமான சூழ்நிலை நிலவுவதால் மதிப்புக்குரிய வலயக்கல்விப்பணிப்பாளருக்கு தாழ்மையாக ஓர் வேண்டுகோளை முன்வைக்கின்றேன். தரம் 1 தரம் 6 வகுப்புக்களுக்கு சமாந்தர வகுப்புக்களை உருவாக்குவதற்கான அனுமதியினைத் தந்துதவுமாறு கேட்டுக்கொள்கின்றேன். அத்துடன் மனித வள ஒதுக்கீட்டின்படி தமிழ்ப்பாடத்திற்கு ஆசிரியர்கள் இருவர் ஒதுக்கப்பட்டுள்ள போதிலும் ஒரு ஆசிரியரே தற்போது சேவையில் உள்ளார். ஒதுக்கீட்டின்படி இன்னொரு தமிழ்ப்பாட ஆசிரியரைத் தந்துதவுமாறு கேட்டுக்கொள்கிறேன். மேலும் எமக்கு சுகாதார தொழிலாளர் பணி வெற்றிடமாக உள்ளதால் அதனையும் நிவர்த்திசெய்து தருமாறு தாழ்மையாகக் கேட்டுக்கொள்கின்றேன்.

எமது பாடசாலை மாணவிகள் கல்வி ஒழுக்கத்தோடு சிந்தனையாற்றல், செயற்றிறன், ஆளுமை உடையவர்களாக எதிர்காலத்தில் திகழ வேண்டும் என்ற உயரிய நோக்கத்தோடு வினைத்திறன் மிக்க செயற்பாடுகளான தியானப்பயிற்சி, யோகாசனம், வாசிப்புப் போட்டிகள், தலைமைத்துவப்பயிற்சிகள் என்பன எம்மால் வழங்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக எமது பாடசாலை மாணவர்கள் நல்லொழுக்கம், கீழ்ப்படிவு, ஆன்மீக சிந்தனையுள்ள ஆரோக்கியமான மாணவ சமுதாயத்தினைக் காணமுடிகிறது. இதனால் நாம் பெருமிதமடைகின்றோம்.

பாடசாலையின் சகல செயற்பாடுகளையும் வெற்றி கரமாக முன்னெடுத்துச் செல்வதற்கு பாடசாலை முகாமைத்துவக்குழுவின ரும், சகல ஆசிரியர்களும் பெரும் பங்காற்றி வருவதுடன், பாடசாலையின் அபிவிருத்திக் குழுவினரும் பாடசாலையின் செயற்பாடுகளில் அதிக அக்கறையுடன் செயற்படுவதும் குறிப்பிடத் தக்கது.

மேலும் கரையோர சுற்றுச்சூழல் பாதுகாப்பு தினத்தை முன்னிட்டு 23.09.2016 அன்று எமது பாடசாலையின் மைதானத்தையும் அதனை அண்டிய கடற்பிரதேசத்தினையும் சிரமதான அடிப்படையில் துப்புரவுப் பணியை மேற்கொள்வதற்கு ஒத்துழைப்பு வழங்கிய வடமராட்சி வடக்கு பிரதேசசெயலர், உத்தியோகத்தர்கள், கிராம அலுவலர்கள், கரையோர பாதுகாப்புப்

படையினர், மற்றும் கிராம பொதுஅமைப்புக்கள் யாவருக்கும் இந்நேரத்தில் எமது பாடசாலைச் சமூகம் சார்பாக எனது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன். மேலும்,

2016ம் ஆண்டு NSBS அண்மைய பாடசாலை சிறந்த பாடசாலை எனும் திட்டத்தின் கீழ் எமது பாடசாலைக்கு அத்தியாவசிய சிறு திருத்தங்களுக்கு Project B க்குள் 2 மில்லியன் ரூபாவும் புதிதாக மலசலகூடம் அமைப்பதற்கு 0.6960 மில்லியன் ரூபாவும், பிரதான மண்டப திருத்த வேலைகளுக்காக 0.83 மில்லியன் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இது எமது பாடசாலையின் பௌதிக வள விருத்தியை மேம்படுத்துவதற்கு பெரிதும் உதவியாக அமைந்துள்ளது. அந்த வகையில் வலயக்கல்விப்பணிப்பாளர் அவர்களுக்கு பாடசாலைச் சமூகம் சார்பாக நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

கௌரவ மாகாணசபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் அவர்களால் மாகாணசபை நிதியிலிருந்து ரூபா ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் பெறுமதியில் பிரதான மண்டப ஒழுங்குபடுத்தல் செய்து தரப்பட்டுள்ளது. அவர்களுக்கும் பாடசாலைச் சமூகம் சார்பாக நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

நிறைவாக எமது பாடசாலையின் வளர்ச்சிக்கும், நிலை பேற்றிற்கும் பௌதிக வசதிகளையும் ஏற்படுத்தித்தந்த பெரு மதிப்பிற்குரிய வலயக்கல்விப்பணிப்பாளர் அவர்களுக்கு மனப்பூர்வ மான நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன். மற்றும் பழைய மாணவர் சங்கம், பாடசாலை அபிவிருத்திக் குழு, வலயக்கல்வி அலுவலக உத்தியோகத்தர்கள், நீண்ட குறிக்கோள்களைக் கொண்டு செயற்படும் எமது ஆசிரியர் குழாத்தினர், கல்விசாரா நிறுவனங்கள், வல்வை ஒன்றியம், கேட்டபோதெல்லாம் உடன் வந்து உதவிகளை வழங்கும் நெடியகாடு இளைஞர்கள், பெற்றோர்கள், நலன்விரும்பிகள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளை கூறிக் கொள்வதோடு மேலும் எமது பாடசாலை பௌதீக வளத்தாலும், கல்வி வளத்தாலும் சிறப்புப் பெற்றுப் பண்புடைய மாணவர்களை உருவாக்கி உலகுக்கு வழங்க, எல்லாம் வல்ல இறையருளைப்பிரார்த்தித்து எனது அதிபர் உரையை நிறைவு செய்து கொள்கிறேன்.

# 2016 அன்பளிப்புச் செய்தோர்

| | | |
|---|---|---|
| 1. | திருமதி.ஜெயமணி மாலினி (2015) | 20,000.00 |
| 2. | செல்வி.ஆனந்தராசா தமிழினி | 20,000.00 |
| 3. | திருமதி. மைதிலி பாலராஜன் | 2,000.00 |
| 4. | திருமதி.அஞ்சனா சிவராம் | 5,000.00 |
| 5. | திருமதி.தயாலட்சுமி செல்வகுரு | 8,000.00 |
| 6. | திருமதி.தீபன் விஜிதா | 1,500.00 |
| 7. | திருமதி.ஜெயசங்கீதா யோகேந்திரா | 50,000.00 |
| 8. | செல்வி.றமணாகரன் தமிழினி | 4,000.00 |
| 9. | செல்வி. யோகராஜன் கிருஜா | 15,000.00 |
| 10. | திருமதி.கெங்காதேவி.வைரமுத்து | 25,000.00 |
| 11. | சைராபானு யோகானந்தசாமி | 10,000.00 |
| 12. | திருமதி.பா.சுசேன் | 65,000.00 |
| 13. | லண்டன் பழைய மாணவர்கள் | 47,500.00 |
| 14. | செல்வன் வைத்தீஸ்வரன் யோகன் | 25,000.00 |
| 15. | செல்வி.தயாநிதிவேல் கௌரி | 5,000.00 |

**விளையாட்டுப்போட்டிக்கான குளுக்கோஸ் அன்பளிப்பு**
திருமதி.கவிதா கோணநாயகம்

**விளையாட்டுப்போட்டிக்கான வெற்றிக்கேடயம் அன்பளிப்பு**
திரு.திருமதி.க.கஜேந்திரன்

**வியைளாட்டு உடை அன்பளிப்பு**
திருமதி.விஜியராஜன் யோகராணி

**5 மின்விசிறிகள் அன்பளிப்பு**
திருமதி.எழில்நங்கை பாலேந்திரன்

**1லோட் கல் அன்பளிப்பு**
ஓர் அன்பர்

**வறுமைக்கோட்டின்கீழ் உள்ள மாணவருக்கான கற்றல் உபகரணங்கள், பாதணிகள் மற்றும் அத்தியாவசிய ஆடைகள் போன்றவற்றை வழங்குவதற்காக ரூபா 53,150 அன்பளிப்பு**

திரு.இ.தர்மலிங்கம்

## தரம் - 01 (2016) மாணவர்களின் விபரம்

| தொ. இல | மாணவர் பெயர் | தொ. இல | மாணவர் பெயர் |
|---|---|---|---|
| 1 | ச.அகானா | 19 | தே.தேனுஜா |
| 2 | சி.சங்கவி | 20 | நி.நியுட்டன் சஞ்சய் |
| 3 | பி.கம்சவி | 21 | செ.டுஜீஸ்டன் |
| 4 | பி.காவியா | 22 | க.சுவிராஜ் |
| 5 | ச.சுவாஜிகா | 23 | சு.வர்ணன் |
| 6 | சி.கேசினி | 24 | ப.லம்போதரன் |
| 7 | செ.தரணியா | 25 | ஆ.கார்த்தீபன் |
| 8 | செ.பதுமிதா | 26 | க.வினோகரன் |
| 9 | ந.றம்யா | 27 | சி.பவித்ரன் |
| 10 | ரா.அனிதா | 28 | வி.அங்கஜன் |
| 11 | உ.பவித்ரா | 29 | ல.மயுரன் |
| 12 | அ.அஜந்தினி | 30 | ஜெ.ஜெயகுமரன் |
| 13 | ச.ஜோபிகா | 31 | பி.கஜிந் |
| 14 | ர.ஸ்ரீவாணி | 32 | அ.ஜென்சன் |
| 15 | பா.மதுசாலினி | 33 | பு.பிரணவன் |
| 16 | த.சுகிர்னியா | 34 | மு.சதுர்ஜன் |
| 17 | தே.ரனுஸ்கா | 35 | ர.அபிலாஸ் |
| 18 | ம.கவினியா | 36 | ர.ஆகாஸ் |

# பரிசு பெறும் மாணவர் விபரம் - 2015

## தரம் 01 (2015)

பரந்தாமன் மாதங்கி - சமயம், கணிதம், தமிழ்
தியாகசீலன் பிருந்தா - சுற்றாடல்
கமலநாதன் பபிராஜ - கிறிஸ்தவசமயம்

## தரம் 02 (2015)

சூரியகுமார் மதுஷன் - தமிழ், கணிதம்
ஆனந்தரூபன் கிருஷாந் - சுற்றாடல், சமயம்
யூதமிரேஸ்வரராஜா யூடின் - கிறிஸ்தவம்

## தரம் 03 (2015)

அன்ரனி விமலதாஸ் நிதர்சன் - சுற்றாடல், கத்தோலிக்க சமயம்
சுரேஸ்குமார் தாரணி - தமிழ், கணிதம், சைவசமயம், ஆங்கிலம்

## தரம் 04 (2015)

சிறீஸ்குமார் டிறோஜன் - தமிழ், ஆங்கிலம்
ஸ்ரீவேட்கொலின் ஜெறோன் - கணிதம், கிறிஸ்தவசமயம்
பஞ்சவர்ணம் சாந்தரூபி - சைவசமயம், சுற்றாடல்

## தரம் 05 (2015)

அருந்தவராசா நிவேதா - தமிழ், கணிதம், சுற்றாடல்
சுதர்சன் கயல்விழி - சமயம், ஆங்கிலம்
அருள்தாஸ் அபிநயா - கிறிஸ்தவசமயம்

## தரம் 06 (2015)

முகுந்தன் வைஷ்ணவி - சைவசமயம், விஞ்ஞானம், புவியியல், குடியியல், வரலாறு, P.T.S, சங்கீதம்
கோணநாயகம் மோகனசுந்தரி - ஆங்கிலம், கணிதம்
துவாரகன் நிஷாந்தி - சைவசமயம், நடனம்
கிறேசியன்கிருபாகரன் மேரிசர்மிளா - சுகாதாரம், கிறிஸ்தவசமயம்

## தரம் 07 (2015)

| | | |
|---|---|---|
| தயாநிதிவேல் தாரணி | - | தமிழ், கணிதம், விஞ்ஞானம், வரலாறு, வாழ்க்கைத்தேர்ச்சி |
| கோணேஸ்வன் விதுஷா | - | சைவசமயம், வாழ்க்கைத்தேர்ச்சி, செயன்முறைத்தொழிநுட்பம் |
| குமாரவேல் பகீரதி | - | நடனம் |
| அரிச்சந்திரன் கௌசலா | - | புவியியல், சுகாதாரம் |
| சிவராஜ் வர்சிகா | - | சங்கீதம் |

## தரம் 08 (2015)

| | | |
|---|---|---|
| மனோகரன் விதுஷிகா | - | ஆங்கிலம், கணிதம், நடனம், விஞ்ஞானம், புவியியல், வரலாறு, வாழ்க்கைத் தேர்ச்சி |
| மணிமாறன் மலர்நிலா | - | சைவசமயம், தமிழ், சுகாதாரம், செயன்முறைத் தொழிநுட்பம் |
| ஸ்ரீசுந்தர் சௌமியா | - | சங்கீதம் |
| அன்ரனிவிமலதாஸ் நிருஷாந்தி | - | சுகாதாரம், கிறிஸ்தவசமயம் |

## தரம் 09 (2015)

| | | |
|---|---|---|
| செந்திவேல் ஆர்த்திகா | - | சமயம், ஆங்கிலம், விஞ்ஞானம், புவியியல், சுகாதாரம், |
| இராசகுமார் தர்சினி | - | தமிழ், வரலாறு, புவியியல் சங்கீதம், வாழ்க்கைத்தேர்ச்சி, கணிதம், |
| இராஜேஸ்வரன் ஜானகி | - | செயன்முறை தொழில்நுட்பம், |
| கிருஸ்ணகுமார் நிகல்யா | - | நடனம் |
| மில்டன் மேரி ஜெனிபா | - | கிறிஸ்தவசமயம் |

## தரம் 10 (2015)

| | | |
|---|---|---|
| ஜெயக்கணேஸ் தமிழ்ப்பிரியா | - | சமயம், தமிழ், வரலாறு, புவியியல், நடனம், ICT |
| குகதாஸ் குகப்பிரியா | - | கணிதம், வர்த்தகம், சங்கீதம் |
| ஸ்ரீயுவராஜன் ஹம்சா | - | கிறிஸ்தவசமயம், விஞ்ஞானம், கடல்வளம் |
| புவிநாதன் சிந்துஜா | - | இலக்கியநயம், சுகாதாரம் |
| செல்வச்சந்திரன் நிரந்தரிகா | - | ஆங்கிலம் |

# தரம் 11 (2015)ல் திறமைச்சித்தி பெற்றோர்

| | |
|---|---|
| பிறேம்குமார் பகீரதி | - சமயம், தமிழ், கணிதம், விஞ்ஞானம், வரலாறு, வர்த்தகம், இலக்கியநயம், ICT |
| சிவபாதராசா லிவேனிகா | - சமயம், தமிழ், கணிதம், ஆங்கிலம், வரலாறு, வர்த்தகம், நடனம், ICT |
| யோகராஜன் கிருஜா | - சமயம், தமிழ், கணிதம், விஞ்ஞானம், வரலாறு, வர்த்தகம், நடனம், ICT |
| கண்ணதாசன் சைலேந்திரி | - சமயம், தமிழ், கணிதம், விஞ்ஞானம், வர்த்தகம், நடனம், ICT |
| கஜேந்திரன் வைதேகி | - சமயம், தமிழ், கணிதம், விஞ்ஞானம், வர்த்தகம், ICT |
| சந்திரமோகன் அஜந்தினி | - சமயம், தமிழ், கணிதம், ICT, வர்த்தகம், இலக்கியநயம் |
| நிமல்ஸ் டினோஜா | - சமயம், தமிழ், கணிதம், வரலாறு, வர்த்தகம், இலக்கியநயம் |
| றமணாகரன் தமிழினி | - சமயம், கணிதம், வரலாறு, நடனம், கடல்வளம் |
| ரவி தேவிகௌசிகா | - சமயம், தமிழ், கணிதம், வரலாறு, ICT |
| ஸ்ரீசங்கர் ஸ்ரீதேவி | - கணிதம், வர்த்தகம், கடல்வளம் |
| கண்ணன் கஸ்தூரி | - சமயம், சித்திரம் |
| பிரகாஷ் பிரித்தி | - கிறிஸ்தவசமயம், தமிழ் |
| வடிவேல் தர்சாயினி | - சமயம், கடல்வளம |
| சிங்கராசா மேரிகௌசிகா | - கிறிஸ்தவசமயம் |
| செல்வராஜ் நிவேதா | - கடல்வளம் |
| ரவிக்குமார் பிருதா | - சமயம் |
| ரவீந்திரராஜா ரஜிதா | - கடல்வளம் |
| உதயகுமார் ராஜினி | - சமயம் |
| சுபாகரன் சுலக்சனா | - சமயம் |
| ஸ்ரீஸ்கந்தராசா தனுசிகா | - சமயம் |

## க.பொ.த(உ/த) 2017
## (வர்த்தகப்பிரிவு)

இராமகிருஸ்ணன் லதா - பொருளியல், கணக்கீடு, வணிகக் கல்வி

## க.பொ.த(உ/த) 2017
## (கலைப்பிரிவு)

திருகுலசிங்கம் திருவாஜினி - தமிழ், இந்துநாகரிகம்
மணிமாறன் டிலானி - நடனம்
இரத்தினஜோதி கௌரி - சங்கீதம்

## க.பொ.த(உ/த) 2016
## (வர்த்தகப்பிரிவு)

பரமானந்தராசா அருணா - பொருளியல்
இராசலிங்கம் லக்சுமி - வணிகக்கல்வி

## க.பொ.த(உ/த) 2016
## (கலைப்பிரிவு)

கிறேசியன்அமலராசா மேரியஸ்ரலா - சங்கீதம்
வின்சன்ராஜசேகர் ஜனுஜா - கிறிஸ்தவநாகரிகம்

## க.பொ.த(உ/த) 2015ல் திறமைச்சித்தி பெற்றோர்

| | பெயர் | பாடம் |
|---|---|---|
| | **வணிகப்பிரிவு** | |
| 1 | ஆனந்தராசா தமிழினி | வணிகக்கல்வி<br>கணக்கீடு<br>பொருளியல் |
| 2 | கோணேஸ்வரன் பிரியங்கா | வணிகக்கல்வி |
| | **கலைப்பிரிவு** | |
| 3 | இரத்தினஜோதி பிரதீபா | நடனம் |
| 4 | முருகுப்பிள்ளை வானதி | நடனம் |
| 5 | சுப்பிரமணியசர்மா துளசி | நடனம் |
| 6 | அன்ரன்மரியதாஸ் மேரிரூபதர்சினி | சங்கீதம் |

# தமிழ்மொழித்தினப் போட்டி முடிவுகள்

## வலயமட்டம்

| | | | |
|---|---|---|---|
| பிரிவு II | ஹ.கிருசாயினி | எழுத்தாக்கம் | 2ம் இடம் |
| பிரிவு V | தி.திருவாஜினி | பேச்சு | 2ம் இடம் |
| பிரிவு II | மு. வைஷ்ணவி | பாவோதல் | 3ம் இடம் |

# சமூகவிஞ்ஞானப் போட்டி 2015

## வலயமட்டம்

| | | |
|---|---|---|
| தரம் 6 | ஹ.கிருஷாயினி | 3ம் இடம் |
| தரம் 8 | த.தாரணி | 1ம் இடம், மாகாணமட்டம் 1ம் இடம் |
| | அ.கௌசலா | 3ம் இடம் |
| தரம் 10 | செ. ஆர்த்திகா | 2ம் இடம் |

# கணித புதிர்ப்போட்டி

## வலயமட்டம் - 2016

| | | |
|---|---|---|
| தரம் 6 | ஹ.கிருஷாயினி | 2ம் இடம் |
| தரம் 8 | த.தாரணி | 2ம் இடம் |

# சைவநெறிப் பாடப் போட்டி

## வலயமட்டம் - 2016

| | | | |
|---|---|---|---|
| தரம் 8 | ஹ.கிருஷாளினி | கோலம் | 1ம் இடம் |
| தரம் 9 | ந.அனுசியா | திருக்குறள் மனனம் | 3ம் இடம் |

# மனைப்பொருளியல் போட்டி

## வலயமட்டம் - 2016

| | | |
|---|---|---|
| தரம் 11 | பா.மேரிநிலாந்தினி | 2ம் இடம் |

# வணிகப்போட்டி

## வலயமட்டம் - 2015

| | | | |
|---|---|---|---|
| பிரிவு I | ரவிக்குமார் பிருதா | பேச்சு | 1ம் இடம் |
| பிரிவு I | யோகராஜன் கிருஜா | குறுவினா | 2ம் இடம் |
| பிரிவு I | சுதாகரன் ரிஷானா | கட்டுரை | 2ம் இடம் |

# மெய்வன்மைப் போட்டிகள் வலயமட்டம்

## வலைப்பந்தாட்டம்

**19வயதுப் பிரிவு - 3ம் இடம்**

சுந்தரலிங்கம் விஜிதா
பரமானந்தராசா அருணா
ராஜலிங்கம் லக்சுமி
மகேஸ்வரன் கிருத்திகா
மணிமாறன் டிலானி
ஞானசேகரம் மதுரா
புவிநாதன் தாட்சாயினி
சுதாகரன் ரிஷானா

## மேசைப்பந்தாட்டம்

**15 வயதுப்பிரிவு - 3ம் இடம்**

அருள்தேவதாஸ் மேரிஆன்திரேசா
உதயகுமார் சசிதரா
செந்திவேல் ஆர்த்திகா
உதயகுமார் பிரவீணா
அகஸ்ரீன்மரியராசா கோபிகா

**19 வயதுப்பிரிவு - 2ம் இடம்**

நகுலேஸ்வரன் கிருஜா
ரவிக்குமார் பிருதா
பிரேம்குமார் பகீரதி
கண்ணதாசன் சைலேந்திரி
சந்திரமோகன் அஜந்தினி
ரமணாகரன் தமிழினி

## பூப்பந்தாட்டம்

**15 வயதுப்பிரிவு - 3ம் இடம்**

கிருஸ்ணகுமார் நிகல்யா
கஜேந்திரராசா யாழினி
உதயகுமார் சசிதரா
உதயகுமார் பிரவீணா
அருள்தேவதாஸ் மேரிஆன்திரேசா
அகஸ்ரீன்மரியராசா கோபிகா

## கரப்பந்தாட்டம்

**17 வயதுப்பிரிவு - 3ம் இடம்**

ரவிக்குமார் பிருதா
சுபாகரன் சுலக்சனா
போல்றோஸ் அலெக்சனா
ஞானமூர்த்தி தயாநிதி
உதயகுமார் ராஜினி
துவாரகா ரொசாந்தி
ஞானச்சந்திரன் சிவரஞ்சினி

**19 வயதுப்பிரிவு - 3ம் இடம்**

ரவிக்குமார் பிருதா
பிறேம்குமார் பகீரதி
ரகு தேவிகௌசிகா
சந்திரமோகன் அஜந்தினி
ரமணாகரன் தமிழினி
கண்ணதாசன் சைலேந்திரி
சிவபாதராசா லிவேணிகா

## மெய்வல்லுநர் விளையாட்டுக்கள்

**21 வயதுப்பிரிவு**

ஸ்ரீகரன் கனுஜா - நீளம் 2ம் இடம், முப்பாய்ச்சல் 1ம்இடம்
குகதாசன் நிஷாந்தினி - குண்டு போடுதல் 1ம் இடம்

**19 வயதுப்பிரிவு**

சுந்தரலிங்கம் விஜிதா - முப்பாய்ச்சல் 2ம் இடம்
மகேஸ்வரன் கிருத்திகா - ஈட்டி எறிதல் 3ம் இடம்
ஞானசேகரம் மதுரா - 100m சட்ட வேலி 3ம் இடம்

## 2015 ஆம் ஆண்டு அகில இலங்கை ரீதியில் நடைபெற்ற மேசைப்பந்தாட்டப் போட்டியில் தரப்படுத்தப்பட்டவர்கள்

ஸ்ரீகரன் கனுஜா
நகுலேஸ்வரன் கிருஜா
அருள்தேவதாஸ் மேரிஆன்திரேசா
சிவனேஸ்வரராசா சுபர்ணா
முகுந்தன் வைஸ்ணவி
ரவிக்குமார் பிருதா

## 2015 English Day Competition (Zonal Level)

### Story Telling

Kesavan Shamini - 3rd Place

### Solo Acting

Paramanantharasa Aruna - 3rd Place

### Role Play

**Grade 9** - 3rd Place

Kesavan Shamini
Senthivel Arthika
Rasakumar Tharsini
Kirushnakumar Nikalya
Theivendram Sarmiya
Antonrasanayagam Delsiya

**Grade 10** - 3rd Place

Selvachandran Nirantharika
Kugathas Kugapriya
Jeyaganesh Thamizhpriya
Inthirathas Inthusha
Uthayakumar Sasithara
Manoharan Kanisha

### Oratory Prepared

**Grade 13** Nadarasa Mathumaiyal - 3rd Place

## 2016 English Day Competition (Zonal Level)

### Copy Writing

**Grade 13** Ramakrishnan Latha - 2nd Place

### Creative writing

**Grade 6** Haridas Kirushayini - 3rd Place

### Reading Aloud

**Grade 8** Sivaraj Varshika - 1st Place

## Solo Acting

**Grade 10** Rasakumar Tharsini - 2nd Place

## Oratory Prepared

**Grade 13** Jeyaganesh Jeyatheepa - 2nd Place
Thiyagaraja Mathusha - 3rd Place

# Group Singing Junior 2nd Place

1 Vijayakumar Denuya
2 Ramakirushnan Prakasini
3 Kumaran Kiruththika
4 Tharpparanantham Abiramy
5 Manoharan Vithushika
6 Srisundar Saumya
7 Vijayarajan Piramitha
8 Nanthakumar Anushiya
9 Nanthakumar Sapitha
10 Kumaravel Saranja
11 Sivakumar Tharshika
12 Tharmathas Mithusha
13 Thurailingam Rojika
14 Manimaran Malarnila
15 Sasikumar Kanipa
16 Sanmukarasa Sanshika
17 Haridas Renuja
18 Sivaraj Varshika
19 Karuththiruman Kishalini
20 Sivakumar Kirushalini
21 Pirémathas Jathursha
22 Vijayakaran Menaga

## பழைய மாணவர் சங்கத்தினால் வழங்கப்படும் விசேட பரிசில்கள்

### 2015 தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர் பெயர் விபரம்

| முழுப் பெயர் | பெற்ற புள்ளிகள் |
|---|---|
| சுதர்சன் கயல்விழி | 185 |
| சிவராசா சைந்தவி | 170 |
| உதயநேசன் சமித்தா | 168 |
| அருந்தவராசா நிவேதா | 159 |
| சிவநாதன் தமிழ்முகிலன் | 158 |
| உதயகுமார் ஜானுஜன் | 155 |
| உதயகுமார் கிருஷிகா | 153 |
| ஜெயராசா சாருஜன் | 153 |
| மணிராஜன் துஷாஜினி | 153 |

### 2016 தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர் பெயர் விபரம்

| முழுப் பெயர் | பெற்ற புள்ளிகள் |
|---|---|
| வைத்தீஸ்வரன் யோகன் | 154 |

### க.பொ.த சாதாரண தரத்தில் சிறந்த பெறுபேற்றுக்கான பரிசு

| | |
|---|---|
| பிறேம்குமார் பகீரதி | 8A,B |
| சிவபாதராசா லிவேனிகா | 8A,B |
| யோகராஜன் கிருஜா | 8A,C |

### க.பொ.த(உ/த)ல் சிறந்த பெறுபேற்றுக்கான பரிசு

| | |
|---|---|
| ஆனந்தராசா தமிழினி | 3A |

### நுண்கலைப்பிரிவில் பல்கலைக்கழகத்திற்குத் தெரிவானோர் - 2016

இரத்தினஜோதி பிரதீபா
சுப்பிரமணியசர்மா துளசி
முருகுப்பிள்ளை வானதி
அன்ரன்மரியதாஸ் மேரிரூபதர்சினி

நன்றி